(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் காலையிலேயே அந்தப் பிரச்சினையை அவர் வந்தவுடன் சொல் லாமல், சற்று பின்னாலே சொன்னபோது, முதலமைச்சரவர்கள் சொன்ன பதிலில், இதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இப் போது இல்லை, விவரத்தைக் கேட்டாலும், மாலையிலேதான் கிடைக்கும், நாளைக் காலையிலே அந்த விவரங்களைத் தருகி றேன் என்று சொன்னார்கள். இப்போது காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அப்படி நடைபெற்ற அடிதடி சம்பந்த மாக, அதிகமாக பாதிக்கப்பட்ட ஒருவர், அவர் சொன்ன பெய ருள்ள ஒருவர், இறந்துவிட்டார் என்பது பற்றி எழுப்ப வேண்டு மென்பதுதான் உள்ளபடியே ஒருவர் இறந்துபோன பிறகு, உடனடியாக இப்போது எதுவும் செய்ய முடியாது. விவரம் கேட்டு, நாளைக் காலையில்தான் தெரிவிக்க முடியும். ஒரு அடிதடியிலே, விபத்திலே, கடுமையான தாக்குதலிலே யாரோ ஒருவர் இறந்துவிட்டால், அதை இந்த அவையிலே சொல்லலாம் என்றாலும்கூட, அதற்கு ஆளுங் கட்சியின் சார்பில் முதலமைச் சர் தகுந்த விளக்கம் சொல்ல முடியாத நேரத்தில் அந்தப் பிரச் சினையைச் சொல்வதால் அதிகப் பயனில்லை. அரசு அவரது கவலையைக் கருத்தளவில் புரிந்து கொண்டது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

5. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்தப் பிரச்சினை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கையாகும். ** **

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : நீங்கள் வெளி யிலே போவதானால் போங்கள். முறை தவறிப் பேசக்கூடாது. எப்படி ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பிப் பேசுகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் குறிப்பு அவைக் குறிப் பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு.) நீங்கள் வெளியேற வேண்டுமானால், சொல்லிவிட்டு வெளியேறலாம். ஆனால், அதற்காகத் திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருக்க அனுமதிக்க மாட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களிடம் கேட்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கோபித்துக் கொண்டாலும் சரி, அல்லது என்ன செய்தாலும் சரி, நாங்கள் மறுப்புச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களிடம் அவர்கள் கோபப்பட வேண்டியதில்லை. உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் அமைதியாகக் கேட்கிறோம். எனவே, தார்மீக ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கையாகும். அதை நாங்கள் வலியுறுத்துகிறோம். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில் வெளியேயும் இதே கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதே கோரிக்கையைத்தான் நாங்கள் இங்கே வலியுறுத்துகிறோம். எனவே முதலமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. (குறுக்கீடு).

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். It is most relevant. You please allow me.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. ரமணி.

[திரு. எஸ். திருநாவுக்கரசு தொடர்ந்து நின்றார்.]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேச வேண்டிய சகல விஷயங்களையும் எவ்வளவு நேரம் பேச வேண்டுமோ அவ்வளவு நேரமும் பேசினார்கள். இப்போதுகூட நான் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளப்புகிறேன். அப்போதும் கூட அவர் உட்காரத் தயாராக இல்லை. இந்த நிலைமை நீடிக்குமானால் என்ன நிலைமை ஏற்படும் என்பது ஏற்கெனவே நாம் அத்தனை பேரும் அனுபவித்திருக்கிற ஒன்றுதான். இப்போது அவர்கள் வேண்டுகோளாக வைத்திருக்கிற கோரிக்கை 'முதலமைச்சர் இராஜிநாமா செய்ய வேண்டும்' என்பதாகும். அப்படித் தொடர்ந்து அவர் பலதரம் சொல்லியாகிவிட்டது. இப்போதும் சொல்லியாகிவிட்டது. அப்படியானால் இப்போது எனக்கு ஒன்று தெரிந்தாக வேண்டும். அது என்னவென்றால், 'அவர் ராஜிநாமா செய்துவிட்டேன்' என்று கூறுகிற வரைக்கும் இந்தச் சபையில் வேறு எதுவும் நடக்க இவர் நின்று கொண்டே இருந்தால் இந்தப் பிரச்சினை நீடிக்குமா, இல்லையா என்பதைத் தாங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

நாங்கள் ஏதோ விளையாட்டுக்காக, அல்லது வேடிக்கை பார்ப்பதற்காக உறுப்பினராக இங்கே இருக்கவில்லை. எங்களுக்கு இந்த அவைக் காரியங்களில் பங்கேற்கும் உரிமை இருக்கிறது. அனைத்து உறுப்பினர்களும் அதற்காகத்தான் இங்கே இருக்கிறார்கள். எனவே, அவர்கள் ராஜினாமா செய்வது எப்போது ? இவர்கள் உட்காருவது எப்போது ? இவர் பேச்சு

எப்போது முடியும்? இப்படியே சில பேருக்கு இந்த அவை சொந்தமாக இருக்க முடியுமா என்பதைப் பொறுத்து தங்களின் தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு அவர்கள் உட்கார வேண்டும் (குறுக்கீடு). எல்லோரும் உட்கார வேண்டும். உட்கார வேண்டுமென்றால் உட்கார வேண்டும், இல்லை இடையூறு செய்வதானால் நான் வெளியேற்ற வேண்டியிருக்கும். திரு. திருநாவுக்கரசு முதலில் உட்கார வேண்டும் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவு செய்து தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களும், தோழமைக் கட்சி உறுப்பினர்களும் மௌனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் என்ன செய்தாலும், அதை ஏற்றுக் கொண்டு இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு; பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்ப, அதையே பேசுவது முறையல்ல. நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களுக்குப் பேசுவதற்கே அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காரலாம். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு எந்த வகையிலும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே, அதை முடிவுக்குக் கொண்டு வருவது நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து, இடையிலே ஏற்பட்ட குறுக்கீடுகளால் சொல்ல முடியாமல் போய்விட்டது. பேராசிரியர் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். கடலூரில் காயம்பட்ட தோழர் இறந்துவிட்டார் என்றார்கள். நான் காலையிலேயே சொன்னேன். அது குறித்த விவரங்களை இன்று மாலைக்குள் பெற்று விடுவதாகவும், நாளைக்கு அது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பாரானால், விவரம் கொடுப்பதாகவும் சொன்னேன். அந்தப் பிரச்சினை வேறு. இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்புகிற பிரச்சினை வேறு. அது குறித்து என்ன செய்யப்போகிறார்கள் என்று அறிவித்துவிடுவார்களானால், இந்த அவை நடப்பதா இல்லையா என்று பிறகு நாம் முடிவு செய்யலாம் (குறுக்கீடு)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நடந்த வன்முறைகளுக்குப் பரிகாரம் கேட்கிறது. முடிவு செய்ய வேண்டியது தாங்களும், மாண்புமிகு முதலமைச்சரும்தான். நாங்கள் எங்கள் கோரிக்கையைத் திரும்பவும் வலியுறுத்துகிறோம். அதன் அடிப்படையில் முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கோரிக்கை (குறுக்கீடு).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை இந்தப் பேரவை பெரும்பான்மை அடிப்படையில் அடியோடு மறுக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள, ஆளும் கட்சி தயாராக இல்லை. முறைகேடான கோரிக்கைகளை இந்த அரசு ஒரு நாளும் ஏற்றுக் கொள்ளாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மட்டுமல்ல, நம்முடைய மத்திய அமைச்சர் திரு. தினேஷ் சிங் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளதைப்போல், அரசியல் சட்டத் திற்குட்பட்டு அவர்கள் நடக்க வேண்டும். அரசாங்கமும் நடக்க வேண்டும்—என்பதற்கேற்ப, நானோ அமைச்சர்களோ ராஜினாமா செய்ய வேண்டுமென்று திரு. திருநாவுக்கரசு அவர்கள் விரும்புவாரானால், அதற்கு ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுத்து, அது ஓட்டெடுப்பின் மூலம்தான் தீர்மானிக்கப்பட வேண்டும். அதைத்தான் அமைச்சர் திரு. தினேஷ் சிங் அவர்களும் உணர்ந்து, முறையாக அதை நாட்டுக்கு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. கோ. வீரையன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு முதலமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கை மீது இறுதியாகப் பதிலளிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கும்போது எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் ஒன்றே கால் மணி நேரத்துக்கு மேல் பேசி, அவர் சொல்ல வேண்டியதைப் பூராவும் சொல்லி முடித்துவிட்டு, அரசுத் தரப்பில் சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லவிடாமல் ஆக்க, இந்த அவையிலே குழப்பத்தை உண்டாக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். அதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு வேடிக்கை. முதலமைச்சர் அரசாங்க அதிகாரிகளிடத்திலே எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று அவரே சொன்னார். பிறகு அவரே ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொன்னார். இரண்டும் முரண்பாடாக இருக்கின்றன. அதுமாத்திரமல்ல, இந்த வழக்குகளை எல்லாம் விலக்கவேண்டும், விலக்கு அளிக்க வேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொள்வதாகவும் சொன்

னார். நான் விலக்கு அளிப்பதா, இல்லையா என்று பதில் சொல்வதற்கே வாய்ப்பு அளிக்காமல், ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொன்னால், எப்படி ராஜினாமா செய்வது?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் அதிகாரிகளிடத்திலே ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை, ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டுமென்று வேண்டுமானால் திருத்திக்கொள்ளுங்கள். எனவே வரி விலக்கு அளிக்கப் போவது, முதலமைச்சராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அதுவெல்லாம் அரசுக்குக் கோரிக்கையே தவிர, தனிப்பட்ட நபருக்கு கோரிக்கை அல்ல. எனவே இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துகிறோம். அதுதான் எங்களுடைய நிலையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சார்பாக அரசு ஏற்கனவே விடை சொல்லிவிட்டது. அருள்கூர்ந்து திரு. திருநாவுக்கரசு உட்காரவேண்டும்; இனிமேல் தொடர்ந்து பேசுவதற்கு நான் அனுமதிக்கப் பாவதில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, வரும் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்து இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சிகளினுடைய உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் கருத்து அறிவித்திருக்கிறார்கள். எது வேண்டுமானாலும் செய்யுங்கள்; நீங்கள் அடித்தாலும், உதைத்தாலும், எங்களைக் கொன்றாலும் நாங்கள் அசையாமல் அமர்ந்து இருக்கப் போகிறோம்; ராஜினாமா செய்ய இயலாது. முடிந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள். இந்த அவையில் நாங்கள் அப்படியே அமர்ந்திருக்கிறோம். நான் தி.மு.க. தோழர்களுடைய கால்களைப் பிடித்துக் கேட்டுக்கொள்கிறேன். அதைபோல் தோழமைக் கட்சிகளின் தோழர்களுடைய கரங்களைப் பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன்; கால்களைப் பிடித்துக் கேட்டுக்கொள்கிறேன். அமைதியாக இருக்க வேண்டுமென்று. அவர்கள் என்ன செய்வதென்றாலும் செய்யட்டும். நாடும், உலகமும் அதைப் புரிந்து கொள்ளட்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: ஜனநாயகத்தில் இந்த தவறு மறுக்க முடியாது. தவறு நடந்துவிட்டால் அந்தத் தவறுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் ஜனநாயகத்தின் மரபு.

திரு. சி. கோவிந்தராஜன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் ....

திரு. கே. ரமணி: தலைவரவர்களே.....

திரு. எஸ். ஆர். இராதா: * * (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேசிய, பேசுகிற எந்தப் பேச்சும் பதிவாகாது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒன்று உட்காருகிறீர்களா, அல்லது நான் பெயரைச் சொல்லி நடவடிக்கை எடுக்கட்டுமா?

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.) (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு உட்பட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை

I name. The Members of the AIADMK Party please move out.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியேறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டே இருந்தனர்.)

6. தீர்மானம்.

பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவர்கள் வெளியேறத் தவறினால் அவர்களை ஒரு வாரம் தற்காலிக நீக்கம் செய்யும் தீர்மானத்தை இந்த அரசின் சார்பிலே முன்மொழியுமாறு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டே இருந்தனர்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இந்த அவையினுடைய கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் காப்பாற்றுவதற்கு மாறாக, அவை நடைபெறாமல் இருக்க, வேண்டுமென்றே இடையூறுசெய்துகொண்டு, எழுந்துநிற்கிற, எழுந்து நின்று, வேண்டுமென்றே தடை செய்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத்